தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## மேட்டூர் அணைக்குநீர்வரத்து அதிகரிப்பு

**மேட்டூர்;**காவிரி நீர்பிடிப்புபகுதியில், பருவமழை தீவிரம் அடைந்துள்ளதால், மேட்டூர் அணைக்கு, நீர்வரத்து வினாடிக்கு, 6,184 கனஅடியாக அதிகரித்து உள்ளது.தமிழக கர்நாடகா எல்லையில் உள்ள, காவிரி நீர்பிடிப்பு பகுதியில், தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளதால், நேற்று முன்தினம், வினாடிக்கு, 5,477 கனஅடியாக இருந்த, மேட்டூர் அணை நீர்வரத்து, நேற்று, வினாடிக்கு, 6,184 கனஅடியாக அதிகரித்தது.மேட்டூர் அணையின் நீர்மட்டம், நேற்று, 42.180 அடியாகவும், நீர் இருப்பு, 13.240 டி.எம்.சி.,யாகவும் உள்ளது.

## குஜராத்தில் அதிக எடையில் விளையும் மாம்பழம்

**வதோதரா:** குஜராத் மாநிலத்தின் வதோதரா மாவட்டத்தில் உள்ள ஷினோர் கிராமத்தில் 2 கிலோ எடை கொண்ட மாம்பழம் விளைந்துள்ளது அனைவரையும் ஆச்சரியத்திற்குள்ளாக்கியுள்ளது. மாவட்டத்தின் நர்மதை ஆற்றின் கரையில் அமைந்துள்ள ஷினோர் கிராமத்தை சேர்நத இக்பால் கோக்கார் என்பவரது தோட்டத்தில் இந்த மாம்பழஙகள் விளைந்துள்ளது. இது குறித்து மாநிலத்தீன ஆனந்த் விவசாய பல்கலை சேர்ந்த தோட்டக்கலை துறை வல்லுநர் ஹேமந்த் படேல் கூறுகையில் இந்த மாம்பழங்கள் மரபணு முறையில்

விளைவிக்கப்பட்டதல்ல . ராஜபுரி மாம்பழங்களை காட்டிலும் நான்கு முதல் ஐந்து மடங்கு பெரியதாக உள்ளது. இது குறித்து விரிவாக ஆய்வு நடத்த வேண்டும் என கூறினார்.

## வளைகுடா நாட்டில் நெல் பயிரிட்டு மலையாளி சாதனை

**துபாய்:** வளைகுடா நாடுகளில் நெல் மற்றும் கோதுமையை பயிரிட்டு சாதனை புத்தகத்தில் இடம் பெற்றார் மலையாளியான சுதீஷ்குமார். இது குறித்து அவர் கூறியதாவது: விவசாயத்தில் முன் அனுபவம் இல்லாத நான் அடிப்படையில் காமர்ஸ் பட்டதாரி. இருப்பினும் சாதனை நிகழ்த்த வேண்டும் என்ற எண்ணத்தில் இதில் ஈடுபட்டதாகவும் இதற்காக ஒவ்வொரு நாளும் 3 முதல் 4 மணி நேரம் வரையில் செலவு செய்ததாகவும் கூறினார்.தற்போது 90 நாட்களை கடந்த நெல் அறுவடை செய்த நிலையில் 100 நாட்களை கடந்த கோதுமை அறுவடைக்கு தயாராக உள்ளதாக தெரிவித்துள்ளார். இவரின் முயற்சியால் வளைகுடா நாடுகளில் நெல் போன்ற பயிர்களை பயிரிட முடியும் என்ற சாதனையை நிகழ்த்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## இயற்கை உரத்தை பயன்படுத்த கேரள மாநிலம் ஆர்வம் : தமிழக விவசாயிகளுக்கு விழிப்புணர்வு இல்லை

**வெள்ளக்கல் :** மதுரை மாநகராட்சி சார்பில், குப்பையில் இருந்து தயாரிக்கப்படும் இயற்கை உரத்தை வாங்க, கேரள அரசு ஆர்வம் காட்டுகிறது. கேரள அரசின் 'கிரிப் கம்பெனி' இயற்கை உரம் கேட்டுள்ளது. தமிழக விவசாயிகளிடம் இயற்கை உரத்தை பயன்படுத்த போதிய விழிப்புணர்வு

இல்லை. இம்மாநகராட்சி எல்லையில் நாள் ஒன்றுக்கு 600 டன் குப்பை, சனி, ஞாயிறுகளில் 300 டன் குப்பை சேகரிக்கப்படுகின்றன. இவை, லாரிகள் மூலம் வெள்ளக்கல் குப்பை கிடங்கில் கொட்டப்படுகிறது. மாநகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை

திட்டத்தின் கீழ் குப்பையிலிருந்து மக்கும் மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து இயற்கை உரம் தயாரிக்கும் தொழிற்சாலை வெள்ளக் கல்லில் நிறுவப்பட்டுள்ளது.

குப்பையில் இருந்து இயற்கை உரம் தயாரிக்கும் பணியை எஸ்.பி.எம்.எல்., நிறுவனம்

மேற்கொண்டுள்ளது. இங்கு, 30 ஆயிரம் டன் எடையுள்ள இயற்கை உரம் விற்பனைக்காக தயாராக உள்ளது. இயற்கை உரத்தை பயன்படுத்த கேரள அரசு ஆர்வம்

காட்டுகிறது. தனியார் தேயிலை உற்பத்தியாளர்கள் சிலர் தமிழகத்தில் இருந்து பதப்படுத்தப்பட்ட மாட்டுச்சாணத்தை விலைக்கு வாங்கி பயன்படுத்துகின்றனர். மாநகராட்சியின் இயற்கை உரத்தை கிலோ 50 காசு விலையில் வாங்க கேரள ஆர்வம் காட்டுகிறது. அம்மாநில அரசின் 'கிரிப் கம்பெனி' இயற்கை உரத்தை பெருமளவு கொள்முதல் செய்ய மதுரை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை துறைக்கு ஆர்டர் கொடுத்துள்ளது. ஆனால், நம்மூர் விவசாயிகள் பலர் மண் வளம், மனித வளத்தை கெடுக்கும் ரசாயன உரங்களை அதிக விலை கொடுத்து வாங்கி பயன்படுத்துகின்றனர். மண்புழு உரம் கிலோ 6 ரூபாய்க்கு விற்கும் நிலையில், இயற்கை உரத்தை கிலோ வெறும் 50 காசுக்கு மாநகராட்சி வழங்க தயாராக உள்ளது.

விவசாயிகளிடம் விழிப்புணர்வு இல்லாததால் இயற்கை உரம் கேரளா உள்ளிட்ட வெளிமாநிலங்களுக்கு அனுப்ப ஏற்பாடுகள் நடக்கின்றன. மண் வளம்

காக்க இயற்கை உரம் பயன்பாடு குறித்து விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். உள்ளூர் தேவை தவிர உபரியாகும் இயற்கை உரத்தை மட்டுமே வெளிமாநிலங்களுக்கு விற்க வேண்டும்.

## அமோகம்! : மானாவரி குண்டுமல்லிப்பூ விளைச்சல்... : சென்ட் தொழிற்சாலை அமைக்க வலியுறுத்தல்

**பனமரத்துப்பட்டி:** பனமரத்துப்பட்டி பகுதியில், மானாவரி குண்டுமல்லி பூ விளைச்சல் அமோகமாக உள்ளது. விலை வீழ்ச்சி, கூலி ஆட்கள் தட்டுப்பாடு ஆகியவற்றால், விவசாயிகள் சோகமடைந்துள்ளனர்.

பனமரத்துப்பட்டி, பள்ளித்தெருப்பட்டி, பெரமனூர், வாழகுட்டப்பட்டி, களரம்பட்டி, கோம்பைக்காடு, காளியாகோவில்புதூர் உள்ளிட்ட கிராமங்களில், குண்டுமல்லி செடி நடவு செய்யப்பட்டுள்ளது. வெயில் காலங்களில், குண்டு மல்லி செடியில், பூக்கள் உற்பத்தி, அதிகளவில் காணப்படும்.

இப்பகுதியில், காலை, 9 மணிக்குள் அறுவடை செய்யப்படும் குண்டுமல்லி பூக்களை வாங்கும் கமிஷன் ஏஜன்ட்கள், சரக்கு வேன் மூலம், பெங்களூரு அனுப்புகின்றனர். அங்கிருந்து, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

மாலை வரை, அறுவடை செய்யப்படும் குண்டுமல்லி பூக்களை, சேலம் பூ மார்கெட் கொண்டு சென்று, விவசாயிகள், நேரடியாக விற்பனை செய்து வருகின்றனர்.

பனமரத்துப்பட்டி பகுதியில், சில நாட்களுக்கு முன் பெய்த மழையால், குண்டுமல்லி செடியில், புதிய கொழுந்துகள் தோன்றி, அவை அரும்புகளாக மாறின. அதை தொடர்ந்து, மொக்குகள் வளர தேவையான வெயில் மற்றும் அதிகாலையில் இதமான காற்று வீசியதால், குண்டுமல்லி பூக்கள் அறுவடைக்கு தயாரானது.

மானாவரி குண்டுமல்லி பூ உற்பத்தி, அதிகளவில் காணப்பட்டதால், நாள்தோறும் பூக்கள் அறுவடை செய்ய, கூலி ஆட்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஒரு லிட்டர் டப்பா குண்டு மல்லி பூ பறிக்க, ஏழு முதல் பத்து ரூபாய் கூலி வழங்கப்படுகிறது.

ஒரு கிலோ பூ பறிக்க, 35 முதல், 50 ரூபாய் வரை கூலி வழங்கப்படுவதால், பெண்கள், சிறுவர், சிறுமியர் குண்டுமல்லி பூ பறிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். கூலி ஆட்கள் தட்டுப்பாடு காரணமாக, பல இடங்களில், செடிகளில் பூ பறிக்காமல் விடப்பட்டுள்ளது. செடியில் மலர்ந்துள்ள பூக்கள், அப்பகுதியில், மணம் வீசி வருகிறது.

மானாவரி குண்டு மல்லி விளைச்சல் அதிகரித்துள்ள நிலையில், விலை வீழ்ச்சியடைந்துள்ளது. சேலம் பூ மார்கெட்டில், ஒரு கிலோ, 50 முதல், 70 ரூபாய் வரை விற்கப்படுகிறது. மாலை நேரத்தில், பூக்கள் வரத்து அதிகரித்து விடுவதால், மேலும் பூக்கள் விலை குறைந்து விடுகிறது.

இது குறித்து, விவசாயிகள் கூறியதாவது:

பூ உற்பத்தி சீஸனில், வியாபாரிகள் சிண்டிகேட் அமைத்துக்கொண்டு, பூக்களுக்கு குறைந்த விலை நிர்ணயம் செய்கின்றனர். பெங்களூரு அனுப்பப்படும் பூக்களுக்கு, கமிஷன் ஏஜன்ட்கள் சரியான விலை தருவதில்லை. குண்டுமல்லி பூ விற்பனையில், வியாபாரிகள், கமிஷன் ஏஜன்ட்கள் பலன் அடைகின்றனர்.

பல ஆண்டுகளாக, சென்ட் தொழிற்சாலை அமைக்க வலியுறுத்தி வருகிறோம். பதவிக்கு வந்த அரசியல்வாதிகள், தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற முன்வரவில்லை. இவ்வாறு கூறினர்.

## அரிசி சந்தை வியாபாரம் "டல்' ஈரோடு வியாபாரிகள் கவலை

**ஈரோடு:** ஈரோடு, அசோகபுரத்தில், நேற்று நடந்த அரிசி சந்தையில், அரிசி வாங்க, மக்கள் அதிகளவில் வராததால், வியாபாரிகள் கவலை அடைந்தனர்.

ஈரோடு அசோகபுரத்தில் வாரந்தோறும், வியாழக்கிழமை, அரிசி சந்தை நடக்கிறது. நேற்றைய சந்தையில், 25க்கும் மேற்பட்ட, அரிசி வியாபாரிகள், விற்பனைக்காக, அரிசி மூட்டைகளை குவித்து வைத்தனர். காங்கேயம், சிவகிரி, கொடுமுடி, சென்னிமலை, பெருந்துறை, பவானி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து, ஐ.ஆர்.20, ஏ.டி.டி., 45, ஏ.டி.டி., 43, பி.பி.டி., பொன்னி, டீலக்ஸ் பொன்னி, இட்லி அரிசி

உள்ளிட்ட, அரிசி ரகங்கள் வரவழைக்கப்பட்டிருந்தது. இதில், 75 கிலோ மூட்டை, 25 கிலோ சிப்பமாக, அரிசி விற்பனை நடந்தது. கடந்த வாரம் விற்பனை செய்யப்பட்ட விலையிலேயே, இந்த வாரமும் அரிசி விற்பனை செய்யப்பட்டது. இதனால் பெரிய அளவில் அரிசி விலையில் மாற்றம் இல்லை.

ஈரோடு மாவட்ட அரிசி வியாபாரிகள் சங்க செயலாளர் கந்தசாமி கூறியதாவது:

கடந்த, இரண்டு வாரங்களை போலவே, சந்தைக்கு வரும் மக்கள் கூட்டம், இந்த வாரமும் குறைந்து காணப்பட்டது. பள்ளி விடுமுறைக்கு, பெரும்பாலானவர்கள் வெளியூர் சென்றுவிட்டதால், வியாபாரம் மந்தமாக இருந்தது. தற்போது, பள்ளி கட்டணம், சீருடை, நோட்டு, புத்தகம் போன்ற செலவுகள் அதிகரித்துள்ளதால், அதிகமாக அரிசி வாங்க, மக்கள் ஆர்வம் காட்டவில்லை. தவிர, அரிசி விலையும் குறையாததால், விலை குறையட்டும் என, மக்கள் காத்திருக்கின்றனர்.

அடுத்த வாரமும், இதே நிலை தான் நீடிக்கும். இன்னும், இரண்டு

வாரத்துக்குப்பின், விற்பனை சூடுபிடிக்கும். ஐ.ஆர்., 20, அரிசி மூட்டை, 2,100 முதல், 2,200 ரூபாய் வரையிலும், ஏ.டி.டி., 45 ரக அரிசி மூட்டை, 2,000 முதல், 2,100 ரூபாய் வரையிலும் விற்பனையானது. ஏ.டி.டி., 43 ரக அரிசி, 2,250 முதல், 2,300 ரூபாய் வரையிலும், பி.பி.டி., பொன்னி, 3,000 முதல், 3,050 ரூபாய் வரையிலும், டீலக்ஸ் பொன்னி, 3,300 ரூபாய் வரை விற்பனையானது. எனினும் மக்கள் கூட்டம் வராததால், வியாபாரம் சுமாராக நடந்தது. இவ்வாறு, கந்தசாமி கூறினார்.

## ஈரோட்டில் அதிகபட்ச மழையளவு பதிவு

**ஈரோடு:** ஈரோட்டில் நேற்று முன்தினம் கனமழை கொட்டியது. மாவட்டத்தில் அதிகபட்ச மழையளவாக, ஈரோட்டில் பதிவானது. அக்னி நட்சத்திர வெயில், கடந்த, 28ம் தேதி நிறைவடைந்தது. ஆனால் மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளிலும், தொடர்ந்து வெயில் சுட்டெரிக்கிறது. மழையை எதிர்பார்த்து, விவசாயிகள் மட்டுமின்றி பொதுமக்களும் கூட காத்திருக்கின்றனர். கடந்த சில தினங்களாகவே, மாவட்டத்தில் பரவலாக அவ்வப்போது மழை பெய்து வருகிறது.

மாவட்டத்தில் நேற்று முன்தினம் மாலை, பல்வேறு இடங்களிலும் பரவலாக மழை பெய்தது. இதில், ஈரோடு மாநகரில் அதிகபட்சமாக, மழை பெய்துள்ளது.
மாவட்ட அளவில், ஈரோடு,28 மி.மீட்டர், கொடிவேரி,27, பவானிசாகர்,13.8, சத்தியமங்கலம்,11, கோபி,14, எலந்தகுட்டைமேடு,11, கவுந்தப்பாடி,11.8, ஒலப்பாளையம்,7 மி.மீட்டர் என மழையளவு பதிவானது. முறையான, மழைநீர் வடிகால் வசதி இல்லாததால், ஈரோடு மாநகரின் பல்வேறு ரோடுகளிலும், மழை நீர் பல மணி நேரம் குளமாக தேங்கி நின்றது. அதன்பின் மெல்ல, மெல்ல வடிந்து, காவிரி ஆற்றில் கலந்தது. மழை பெய்த, சில மணி நேரங்கள் மட்டுமே, குளிர்ந்த சூழல் காணப்பட்டது. எனினும், நேற்று பகல் பொழுதில் அக்னி நட்சத்திரத்தை போன்றே, வெயில் சுட்டெரித்தது.

## "சந்ததிகளுக்காக இயற்கையை காப்போம்' பேரணியில் கலெக்டர் வலியுறுத்தல்

**கோபிசெட்டிபாளையம்:** கோபி வைரவிழா மேல்நிலைப்பள்ளியில், பல்வேறு அமைப்பு, பள்ளிக்கல்வித்துறை சார்பில், உலக சுற்றுச்சூழல் தினவிழா நடந்தது.
கலெக்டர் சண்முகம், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பேரணியை துவக்கி வைத்து பேசியதாவது:இயற்கையான நதிக்கரையில், சீன நாகரீகம் தோன்றியது. மனிதன் உணவுக்காக, டிபன் கேரியரில் எடுத்து சென்ற காலம் போய், தண்ணீரை விலை கொடுத்து வாங்கும் நிலைக்கு, தள்ளப்பட்டுள்ளான். மண் புழுவை பார்த்து, மனிதன் நிலத்தில் ஏர் உழுதான். இயற்கையை மறந்துவிட்டோம். நீருக்கு போராட வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டுள்ளோம். சுற்றுச்சூழல் மாசுபட்டால், கடந்த, 25 ஆண்டில், 300 விதமான நோய்கள் கண்டறியப்பட்டுள்ளது. அனைவரும், காலத்தை, சற்று முன்னோக்கி சென்று சிந்திக்க வேண்டும். நாம் அனைவரும், கூடிப்பிழைக்கிறோம். எடுத்து செல்வதற்கு ஒன்றும் இல்லை. நமது வருங்கால சந்ததியினருக்கு, இயற்கை தந்த செல்வங்களை, சிறு அளவிலாவது விட்டு செல்வோம். சுற்றுச்சூழலை அனைவரும் காக்க வேண்டும், என்றார். சி.இ.ஓ., அய்யண்ணன், டி.இ.ஓ., சிவாஜி, நகராட்சி தலைவர் ரேவதிதேவி உட்பட

பலர் பங்கேற்றனர். மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் கீதா நன்றி கூறினார்.

**கோடை உழவு செய்தும் மழையின்றி விவசாயிகள் ஏமாற்றம் : தென்மேற்கு பருவ மழையாவது கை கொடுக்குமா**

**சிவகங்கை :** சிவகங்கையில் வழக்கத்தை விட கோடை மழை பெய்தபோதும், உழவு செய்த விவசாயிகள் பயிர் நடவுக்கான மழையின்றி, ஏமாற்றம் அடைந்துள்ளனர். சிவகங்கை மாவட்டத்தில், நெல், கரும்பு, தானிய பயிர்கள், பருத்தி, மிளகாய், காய்கறி 1.45 லட்சம் எக்டேரில், ஆண்டுதோறும் நடவு செய்யப்படுகிறது.கடந்த 2 ஆண்டுகளாக பருவ மழை பொய்த்ததால், கிணற்று பாசனம் மூலம், விவசாயம் செய்யக்கூட முடியாத நிலையில், நீர்மட்டம் குறைந்துவிட்டது. வானம் பார்த்த பூமியான சிவகங்கையில், பெரும்பாலும் விவசாயிகள் மானாவாரியாகவே, பயிர்களை நடவு செய்து வருகின்றனர். மே 3 முதல் 6 ம் தேதி வரை, தொடர்ந்து நல்ல மழை பெய்தது. இந்த கோடை மழை, இம்மாவட்டத்தை பொறுத்தமட்டில், இயல்பை விட அதிகமாகவே இருந்ததாக, விவசாய அதிகாரிகள் தெரிவித்தனர். கோடை உழவு: கோடை மழையை நம்பி, மானாவாரியாக பருத்தி, கடலை உள்ளிட்டவற்றை நடவு செய்வதற்காக, விவசாயிகள் தங்களது நிலங்களில் உழவு பணி செய்திருந்தனர். தொடர்ந்து, தென்மேற்கு பருவ மழை பெய்யும், அந்த மழையை வைத்து, விவசாய பணிகளை துவங்கலாம் என, காத்திருந்தனர். ஆனால், கடந்த சில நாட்களாக மழை பெய்யும் என, வானிலை அதிகாரிகள் தெரிவித்தபோதும், சிவகங்கை மாவட்ட விவசாயிகளை, தென்மேற்கு பருவ மழை ஏமாற்றி வருகிறது. கடந்த 2 ஆண்டுகளில் ஏற்பட்ட வறட்சி போன்றே, இந்த ஆண்டும் விவசாயம் பொய்த்துபோகுமோ என்ற அச்சத்தில், விவசாயிகள் உள்ளனர்.

விவசாயத்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில்,"" கோடை மழையை நம்பி, விவசாயிகள் உழவு பணியை முடித்துவிட்டனர். தென்மேற்கு பருவ மழை மேற்குதொடர்ச்சி மலை பகுதிகளில், பெய்து வந்த போதும், சிவகங்கை மாவட்டத்திற்கு இன்னும் கை கொடுக்கவில்லை. மழை, இரண்டு நாட்களில் கைகொடுக்கும் என, நம்புகிறோம். இதற்காகவே, விவசாயிகளுக்கு மானிய விலையில் விதை நெல், இடுபொருட்கள் வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறோம்," என்றார்.

## வரத்து அதிகரிப்பால் மாம்பழ விலை வீழ்ச்சி

**தர்மபுரி:** மா வரத்து அதிகரிப்பால், மாம்பழம் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. தர்மபுரி மாவட்டம், விவசாயத்தை பிரதானமாக கொண்ட மாவட்டம் ஆகும். மாவட்டத்தில், மா சாகுபடி முக்கிய பங்கு வகிக்கிறது. மாவட்டத்தில், நல்லம்பள்ளி, பாலக்கோடு, மாரண்டஹள்ளி, காரிமங்கலம், அரூர் உட்பட மாவட்டம் முழுவதும், 15,000 ஹெக்டருக்கு மேல், மா சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில், அதிகபட்சமாக, பெங்களூரா ரகமும், தொடர்ந்து, செந்தூரா, மல்கோவா, பீத்தர் உள்ளிட்ட ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சில ஆண்டுகளாக மா வரத்து அதிகரித்ததால், போதிய விலையின்றி, விவசாயிகள் அவதியடைந்து வந்தனர்.

கடந்தாண்டு மாவட்டத்தில், தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை, எதிர்பார்த்த அளவுக்கு பெய்யவில்லை. இதனால், மா மரங்களில், பூக்கள் பூப்பதில் காலதாமதம் ஏற்பட்டதால், வழக்கமாக, ஃபிப்ரவரி இறுதியில் துவங்கும் மாம்பழ சீஸன், இந்தாண்டு, ஏப்ரல் மத்தியில் துவங்கியது. மாம்பழ சீஸன் துவக்கத்தில், முன் பருவ ரகமான செந்தூர மாம்பழம், ஒரு கிலோ, 80 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. மேலும், அதனை தொடர்ந்து விற்பனைக்கு வந்த மல்கோவா ஒரு கிலோ, 160 ரூபாய்க்கும், பீத்தர், 130 ரூபாய்க்கும், அல்போன்ஸா, 140 ரூபாய்க்கும், பெங்களூரா, 40 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது.

இந்நிலையில், மாவட்டத்தில் சில தினங்களாக, அனைத்து ரக மாம்பழங்களின் வரத்து அதிகரித்துள்ளது. அதனால், மாவட்டத்தில் மாம்பழ விலை திடீரென குறைந்தது. தற்போது, செந்துரா, ஒரு கிலோ, 25 ரூபாய்க்கும், மல்கோவா, 60 ரூபாய் முதல், 50 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது.
மேலும், பீத்தர், அல்போன்ஸா உள்ளிட்ட மாம்பழங்கள், ஒரு கிலோ, 50 ரூபாய் முதல், 40 ரூபாய் வரையிலும், பெங்களூரா, 20 ரூபாய் முதல், 25 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. மாம்பழம் விலை கணிசமாக குறைந்தால், பொதுமக்கள் மாம்பழங்களை ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர்.

## மாங்காய்களை நிறம் மாற்றும் ரசாயனம் மக்களை ஏமாற்றும் மொத்த வியாபாரிகள்

**திண்டுக்கல் :** பழக்குடோன்களில் "கார்பைடு', ரசாயன கல்லை பயன்படுத்தி பழுக்க வைக்கப்பட்ட மாங்காய்களை மொத்த வியாபாரிகள் விற்பனை செய்வதால் அதை உண்பவர்கள் வயிற்று உபாதையால் அவதிப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.
தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் மாங்காய் சாகுபடி செய்யும் விவசாயிகள் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். மல்கோவா, இமாம்பசந்த், செந்தூரம், பங்கனபள்ளி, காசாலட்டு, அல்போன்சா உட்பட பலவகையான மாங்காய்கள் விளைவிக்கப்படுகிறது.
கடந்த இரண்டு ஆண்டுகளாக மழை இல்லாததால், குறைந்தளவிலேயே மா விளைச்சல் உள்ளது. கிராமங்களில் பறிக்கப்படும் மாங்காய்கள், மாவட்ட தலைநகர்களில் உள்ள குடோன்களில் விற்கப்படுகிறது. இவற்றை இயற்கையாக பழக்க வைத்தால் ஒரு வாரத்திற்கு மேலாகும். இதனால் "கார்பைடு' எனப்படும் ரசாயன பவுடரை தூவி ஒரே நாளில் பழுக்க

வைக்கின்றனர். இந்த ரசாயனத்தால் மாங்காய்கள், கண்ணை பறிக்கும் பழக்கலரில் தோற்றமளிக்கும்.

இதை சாப்பிடுபவர்களுக்கு பல்வேறு நோய்கள் ஏற்படும். வயிற்று போக்கு, வாயில் எரிச்சல், குடலில் புண், தோலில் அரிப்பு உருவாகும். இவற்றை தடை செய்ய வேண்டிய சுகாதார அதிகாரிகள் கண்டு கொள்வதில்லை. திண்டுக்கல் கலெக்டர் வெங்கடாசலம் கூறுகையில்,""குடோன்களில் கார்பைட் கல் பயன்படுத்துவதை தடுக்க வேளாண்மை, சுகாதாரத்துறை தலைமையில் தனி குழு அமைக்கப்பட்டுள்ளது. கார்பைடு கல் பயன்படுத்துவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்,'' என்றார்.

## நீங்கியது கால்நடை தீவன தட்டுப்பாடு

**ஆண்டிபட்டி** :

தேனி மாவட்டத்தில் பெய்த கோடை மழையால், கால்நடைகளுக்கான தீவன தட்டுப்பாடு தற்காலிகமாக குறைந்து உள்ளது. மழைக்காலங்களில் விளையும் தானிய, பயறு வகை பயிர்களை அறுவடைக்கு பிறகு விவசாயிகள் கால்நடை தீவனத்திற்கு பயன்படுத்தி வந்தனர். சில விவசாயிகள் வெளியூர்களில் இருந்து வைக்கோல், சோள தட்டைகளை விலைக்கு வாங்கி வந்து இருப்பில் வைத்து கோடைகாலத்தில் தீவனத்திற்கு பயன்படுத்துவர். தென்மேற்கு, வடகிழக்கு பருவமழை கடந்த ஆண்டு பொய்த்துப்போனதால் மானாவாரி, இறவை பாசனங் களின் பரப்பு குறைந்து போனது. இதனால், கால்நடைகளுக்கு தேவையான தீவனங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. செயற்கை தீவன விலை பல மடங்கு உயர்ந்து விட்டது. இயற்கை தீவன விளைச்சல் இல்லாததால் இருப்பில் வைக்க

முடியவில்லை. இதனால் கால்நடை வளர்ப்போர் தீவனத்திற்காக திண்டாடும் நிலை ஏற்பட்டது. பால்மாடுகள், வளர்ப்பு மாடுகளை பராமரிக்க முடியாத விவசாயிகள் பலர், கால் நடைகளை குறைந்த விலைக்கு விற்று வந்தனர். கடந்த சில வாரங்களாக, தேனி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கோடை மழை பரவலாக பெய்து வருகிறது. வறண்டு கிடந்த நிலங்களில் புல் முளைக்க துவங்கி உள்ளது. நீர் வரத்து ஓடைகள், கண்மாய்கள், சிறு குளங்களில் ஆங்காங்கே நீர் தேங்கி உள்ளது. பெரியாறு அணையில் இருந்து திறந்து விடப்படும் நீரால், ஆற்றின் கரையோர விவசாய நிலங்களும் பயன்பெற்று வருகின்றன. இதனால் கால்நடைகளுக்கு தேவையான இயற்கை தீவனம் கிடைத்து வருகிறது. கடந்த ஆண்டு பால்மாடுகள், ஆடுகளை குறைந்த விலைக்கு விற்பனை செய்த விவசாயிகள் தற்போது சுதாரித்து வருகின்றனர். விவசாயிகள் பலரும் கால்நடைகளை விற்பனை செய்யாமல் பராமரிப்பதால், பால்மாடுகளுக்கு தற்போது கிராக்கி ஏற்பட்டுள்ளது. கடந்த பல மாதங்களாக சரிந்து வந்த பால் உற்பத்தி, படிப்படியாக உயரும் வாய்ப்புள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## பயிர் காப்பீட்டு திட்டத்தில் விவசாயிகளுக்கு சலுகை

**தேனி :** பயிர் காப்பீட்டு திட்டத்தில், விவசாயிகளுக்கு கூடுதல் சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

**இது குறித்து விவசாயத்துறை அதிகாரிகள் கூறியதாவது:**

பயிர் காப்பீட்டு திட்டத்தில் நெல், கம்பு, சோளம், மக்காச்சோளம், ராகி, உளுந்து, பச்சை பயறு, துவரை, நிலக்கடலை, எள், கரும்பு, பருத்தி, உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம், இஞ்சி, மஞ்சள், மரவள்ளிக்கிழங்கு,

வாழை ஆகிய பயிர்களை காப்பீடு செய்யலாம்.குத்தகைக்கு விவசாயம் செய்பவர்களும் பயன் பெறலாம். பயிர்க்கடன் பெறுவோர், நகைக்கடன் பெறுவோர் மட்டுமின்றி, விருப்பத்தின் அடிப்படையில் பயன் பெறலாம். விவசாயிகள் தங்கள் விருப்பத்தின் பெயரில், கூடுதலாக காப்பீட்டு தொகை செலுத்தி சராசரி மகசூலின் 150 சதவீதம் மதிப்பு வரை காப்பீடு செய்து கூடுதல் பலன் பெறலாம். இத்திட்டத்தின் கீழ், குறிப்பிட்ட நோய் அல்லது பரவலான பாதிப்புகள் காரணமாக ஒரு பகுதியில் ஒரு விவசாயிக்கு கணிக்கப்பட்ட மகசூல், உத்திரவாத மகசூலை காட்டிலும் குறைவாக இருந்தாலும், நிதியுதவி வழங்கப்படும். இவ்வாறு தெரிவித்தனர்.

**நெல், விதை நேர்த்திக்குப்பின் நடவு செய்ய ஆலோசனை**

கூடலூர் : **நெல் விதையை நேர்த்தி செய்த பின், நடவு செய்ய வேண்டும், என விவசாயத்துறை உதவி இயக்குனர் அசோகன் கூறியுள்ளார். அவர் கூறியதாவது: கம்பம் வட்டாரத்தில் குறுவை நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள், கம்பம் விவசாய விரிவாக்க மையத்திலும், கூடலூர் துணை விவசாய விரிவாக்க மையத்திலும், குறுவை பட்டத்திற்கு ஏற்ற ஆடுதுறை 45, ஆடுதுறை 36 ரக நெல் விதைகள் மானிய விலையில் உள்ளது. வீரிய ஒட்டு ரகம், உயர் விளைச்சல் ரக நெல் விதைகளை தனியார் கடைகளில் வாங்கும் போது, சான்று பெற்ற விதைகளை உரிமம் பெற்ற கடைகளில் மட்டும் வாங்க வேண்டும். விதைகளுக்கான ரசீதை பெற வேண்டும். வீரிய ஒட்டு ரக விதைகளை ஒரு முறைக்கு மேல் பயன்படுத்தக்கூடாது.விதையை நிலத்தில் விதைப்பதற்கு முன், வறட்சியைத் தாங்குவதற்கும், முளைப்புத் திறனைக் கூட்டுவதற்கும், நோய்க்கிருமிகளை அழிப்பதற்கும், காற்றில் உள்ள தழைச்சத்தினை பயிருக்கு**

கிடைக்கச் செய்வதற்கும், விதை நேர்த்தி செய்தல் அவசியம். ஒரு கிலோ விதைக்கு, 2 கிராம் கார்பன்டாசிம் அல்லது 10 கிராம் சூடோமோனஸ் கலந்து, 24 மணிநேரம் வைத்திருந்து, விதைப்பதற்கு 30 நிமிடம் முன், 3 பாக்கெட் அசோஸ்பைரில்லம் மற்றும் 3 பாக்கெட் பாஸ்போபோக்டீரியா உயிர் உரத்துடன் ஆறிய அரிசிக்கஞ்சி கொண்டு விதை நேர்த்தி செய்யவேண்டும்.திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவு செய்தும், நெல் சாகுபடியில் அதிக மகசூல் பெற்று பயனடைய விவசாயிகள் முன்வரவேண்டும்' என்று அவர் கூறினார்

**இன்றைய வேளாண் செய்திகள்**

கர்நாடக நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கனமழை: காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து 4ஆயிரத்து 700 கனஅடியாக அதிகரிப்பு ஒகேனக்கல் அருவிகளில் தண்ணீர் கொட்டுகிறது



**கர்நாடக நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் கனமழையால் காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து 4 ஆயிரத்து 700 கனஅடியாக அதிகரித்துள்ளது. இதனால் ஒகேனக்கல் அருவிகளில் தண்ணீர் கொட்டுகிறது.**

காவிரி ஆறு

**கர்நாடக மாநிலத்தில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த சில நாட்களாக கன மழை பெய்து வருகிறது. இதனால் காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து அதிகரித்து உள்ளது. இதன் காரணமாக கடந்த சில மாதங்களாக தண்ணீர் இன்றி வறண்டு பாறைகளாக காணப்பட்ட ஒகேனக்கல் ஐந்தருவி, மெயின் அருவி பகுதிகளில் செந்நிறத்தில் தண்ணீர் கொட்டுகிறது.தமிழகத்தின் காவிரி நுழைவிடமான பிலிகுண்டுலு பகுதியில் பொதுப்பணித்துறை அதிகாரிகள் அவ்வப்போது தண்ணீர் வரத்து குறித்து ஆய்வு செய்து வருகின்றனர். மேலும் தண்ணீர் வரும் அளவை அவர்கள் கண்காணித்து வருகின்றனர். கடந்த 1–ந்தேதி முதல் காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து அதிகரித்து படிப்படியாக உயர்ந்து நேற்று மாலை 6 மணி அளவில் வினாடிக்கு 4 ஆயிரத்து 700 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருந்தது.**

சுற்றுலா பயணிகள் உற்சாகம்

**காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளதால் ஒகேனக்கல்லுக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. அவர்கள் எண்ணெய் மசாஜ் செய்து அருவிகளில் குளித்து மகிழ்ந்தும், காவிரி ஆற்றங்கரையில் விளையாடி மகிழ்ந்தனர். மேலும் ஐந்தருவி, சினிபால்ஸ், மெயின் அருவிகளில் செந்நிறத்தில் கொட்டும் தண்ணீரை பார்த்து சுற்றுலா பயணிகள் உற்சாகம் அடைந்தனர்.**

**காவிரி ஆற்றிற்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளதால் போலீசார், ஊர்க்காவல்**

**படையினர், தீயணைப்பு படையினர் ரோந்து சென்று தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளதால் சுற்றுலா பயணிகள் வருகை மேலும் அதிகரிக்கும். இதனால் வியாபாரமும் சூடுபிடிக்கும் என்று வியாபாரிகள் எதிர்பார்ப்பில் உள்ளனர்.**

## காய்கறி செடிகள் நீரில் மூழ்கி சேதம் விவசாயிகள் கவலை



மறையூர்,

**காந்தலூரில் பலத்த மழை எதிரொலியாக 500 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு இருந்த காய்கறி செடிகள் நீரில் மூழ்கி சேதம் அடைந்தன.**

காந்தலூர் பகுதியில் மழை

**இடுக்கி மாவட்டம் மறையூரை அடுத்த காந்தலூரில் கடந்த 3 நாட்களாக பலத்த காற்றுடன் மழை பெய்துவருகிறது. பலத்த மழை காரணமாக இந்த பகுதியில் ஆறுகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடி வருகிறது. மன்னவன்சோலை வனப்பகுதியில் பெய்த மழை எதிரொலியாக, காந்தலூர் பகுதியில் குகநாதபுரம், செங்களாறு, பெருமலை, புத்தூர், கீழாந்தூர் பகுதியில் உள்ள விவசாய தோட்டங்களில் வெள்ள நீர் புகுந்தது.இதனால் அங்கு சாகுபடி செய்யப்பட்டு**

இருந்த காரட், பீன்ஸ், உருளைகிழங்கு, முட்டைகோஸ், வெள்ளைபூண்டு, பீட்ரூட் போன்றவைகளின் நடவுசெய்யப்பட்ட விதைகளும், ஒரு மாதமான பயிர்களும் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டது. இதனால் விவசாயிகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

விவசாயிகள் கவலை

இந்த மழையால் 500–க்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில் காய்கறி சாகுபடி செய்யப்பட்ட விவசாய நிலங்கள் சேதம் அடைந்துள்ளதாக கூறப்படுகிறது. இதன் சேத மதிப்பு ரூ.20 லட்சம் இருக்கும் என்று கூறப்படுகிறது. தற்போது சேதமடைந்த விளைநில பகுதிகளை விவசாயத்துறையினர் பார்வையிட்டு சேத விவரங்களை மதிப்பீடு செய்து வருகிறனர்.காந்தலூர் பகுதியில் அதிகளவில் இந்த சேதம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக இன்னும் 3 மாதத்தில் விளைச்சல் எடுக்கும் குளிர்கால காய்கறி விவசாயம் செய்து வந்த விவசாயிகள் பயிர்கள் நாசம் அடைந்துள்ளதால் மிகுந்த கவ்லை அடைந்துள்ளனர். மேலும் இந்த விவசாய நிலங்கள் காட்டாற்று வெள்ளம் காரணமாக அரித்து உள்ளதால், அவற்றை சீரமைத்து மீண்டும் விவசாயம் செய்ய தாமதம் ஆகும் நிலை உருவாகி உள்ளது. அப்போது ஏற்படும் பருவநிலை மாற்றத்தில் போதிய மகசூல் கிடைக்குமா? என்ற கேள்விக்குறியும், பயிர்களுக்கு உரிய இழப்பீடு கிடைக்குமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.எனவே இந்த மழை சேதத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நஷ்டஈடு வழங்க கேரள மாநில அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதுதவிர பெருமலையில் கேரள மாநில அரசின் பழம் காய்கறி

**உற்பத்தி சங்கத்தின் சார்பில் அமைக்கப்பட்ட விவசாயத்திற்கான கூண்டு ஒன்று பலத்த காற்றில் சரிந்து சேதம் அடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.**

## குமரி மாவட்டத்தில் சாரல்: குளச்சலில் 24.4 மி.மீ. மழை பதிவு



**நாகர்கோவில்,**

நாகர்கோவில் உள்ளிட்ட குமரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று முன்தினம் காலை சாரல் மழை பெய்தது. குமரி மாவட்டத்தில் நேற்று காலை 8 மணி வரையிலான 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு (மி.மீ.) வருமாறு:–

பேச்சிப்பாறை– 1, நாகர்கோவில்– 5.2, பாலமோர்– 4.8, இரணியல்– 14, ஆணைக்கிடங்கு– 2, குளச்சல்– 24.4, குருந்தங்கோடு– 15.2 என்ற அளவில் மழை பதிவாகியுள்ளது. நேற்றைய நிலவரப்படி பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் 21.85 அடியாகவும், பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 46.10 அடியாகவும், சிற்றார்–1 அணையின் நீர்மட்டம் 7.94 அடியாகவும், சிற்றார்–2 அணையின் நீர்மட்டம் 8.03 அடியாகவும், மாம்பழத்துறையாறு அணையின் நீர்மட்டம் 54.12 அடியாகவும், பொய்கை அணையின் நீர்மட்டம் 6 அடியாகவும், முக்கடல் அணையின் நீர்மட்டம் 2 அடியாகவும் உள்ளன.பேச்சிப்பாறை அணைக்கு வினாடிக்கு 51 கன அடி தண்ணீரும், பெருஞ்சாணி அணைக்கு வினாடிக்கு 40 கன

அடி தண்ணீரும் வந்து கொண்டிருந்தது. ஆனால் நேற்று மழை இல்லை. பகல் முழுவதும் வெயில் கொளுத்தியது.

பரமத்தி வேலூர் ஏல மார்க்கெட்டில் வாழைத்தார் விலை சரிவு விவசாயிகள் கவலை



**பரமத்தி வேலூர் தினசரி ஏல மார்க்கெட்டில் வாழைத்தார்கள் விலை சரிந்து உள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.**

வாழை பயிரீடு

**நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் தாலுகாவில் பரமத்தி வேலூர், பாண்டமங்கலம், நன்செய் இடையார், பொத்தனூர், அணிச்சம்பாளையம், குப்புச்சிபாளையம், ஓலப்பாளையம், எல்லைமேடு உள்ளிட்ட பகுதிகளில் ஏராளமான ஏக்கரில் வாழை பயிர் செய்யப்பட்டு உள்ளது.இங்கு விளையும் வாழைத்தார்கள் சேலம், திண்டுக்கல், கோவை, ஊட்டி, மதுரை, பழனி, உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும், கேரளா, கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும் தினந்தோறும் அனுப்பப்பட்டு வருகிறது.**

**மேலும் பரமத்தி வேலூரில் உள்ள மார்க்கெட்டிலும் வாழைத்தார் ஏலம் விடப்பட்டு வருகிறது.**

விலை சரிவு

**சென்ற வாரம் இந்த மார்க்கெட்டில் நடைபெற்ற ஏலத்தில் பூவன் வாழைத்தார் ஒன்று ரூ.350-க்கும், கற்பூரவள்ளி ரூ.300-க்கும், ரஸ்தாலி ரூ.400-க்கும், பச்சை நாடன் வாழைத்தார் ரூ.300-க்கும், மொந்தன் வாழைக்காய் ஒன்று ரூ.6 வீதம் ஏலம் போனது.நேற்று நடைபெற்ற ஏலத்தில் பூவன் வாழைத்தார் ஒன்று ரூ.200-க்கும், கற்பூரவள்ளி ரூ.150-க்கும், ரஸ்தாலி ரூ.200-க்கும், பச்சை நாடன் வாழைத்தார் ரூ.150-க்கும், மொந்தன் வாழைக்காய் ஒன்று ரூ.4 வீதம் ஏலம் போனது.**

விவசாயிகள் கவலை

**சென்ற வாரத்தை காட்டிலும் இந்த வாரம் வாழைத்தார் விலை சரிந்து உள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர். பரமத்தி வேலூர் பகுதியில் சமீபத்தில் பலத்த சூறாவளி காற்றுடன் மழை பெய்தது. இதில் ஆயிரக்கணக்கான வாழை மரங்கள் ஒடிந்துவிட்டன.இதனால் ஒடிந்த விழுந்த மரங்களில் இருந்த தார்களை விவசாயிகள் அதிகளவு வெட்டிக்கொண்டு வந்ததால், ஏல மார்க்கெட்டு வாழைத்தார் வரத்து அதிகரித்தது. இதன் காரணமாக விலை குறைந்து விட்டது என்று விவசாயிகள் தெரிவித்தனர்.**

ரசாயன கல் மூலம் பழுக்க வைத்த மாம்பழங்கள் பறிமுதல்



**விருதுநகரில் சுகாதார துறை அதிகாரிகள் சோதனை நடத்தி ரசாயன கல் வைத்து செயற்கை முறையில் பழுக்க வைத்த மாம் பழங் களை பறிமுதல் செய்தனர்.**

சோதனை

**விருதுநகர் பகுதியில் நகராட்சி சுகாதார துறை அதி காரிகள் அடிக்கடி சோதனை நடத்தி கலப்பட பொருட்கள், கெட்டுப்போன இறைச்சிகள், காலாவதியான பொருட்கள், பொது இடங்களில் விற்பனை செய்யப்படும் சிகரெட், பீடி, புகையிலை, குட்கா போன்ற வற்றை கைப்பற்றி பறிமுதல் செய்து வருகின்றனர்.**

மாம்பழம்

**இந்தநிலையில் விருதுநகர் பகுதியில் மாம்பழங்கள் ரசாயன கல் மூலம் பழுக்க வைத்து அதிகளவில் விற்பனை செய்யப்படுவதாக சுகாதார அதிகாரிகளுக்கு புகார் வந்தது. இதைதொடர்ந்து சுகாதார அதிகாரிகள் நேற்று விருதுநகர் சீதக்காதிதெரு, மார்க்கெட், கீழக்கடை தெரு பகுதிகளில் திடீர் சோதனையில் ஈடு பட்டனர். இந்த அதிரடி சோதனையில் கல் வைத்து பழுக்க வைக்கப்பட்ட மாம் பழங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த சோதனையில் கீழக்கடை தெருவில் உள்ள ஒரு கடையில் இருந்த கல் வைத்து பழுக்க வைக்கப்பட்டு**

இருந்த 4 பெட்டிகள் பறிமுதல் செய்யப்பட்டன. இந்த சோதனை குறித்து சுகாதார அதிகாரிகள் கூறும்போது, இந்த சோதனை தொடர்ந்து நடத்தப்படும். விதிமுறைகளை மீறி கல் மூலம் பழுக்கவைத்து மாம்பழங்களை விற்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றனர்.